# மோட்டார் வாகன விபத்துக்கள் கோரிக்கை தீர்ப்பாயம், அவிநாசி

## அவிநாசி சார்பு நீதிமன்றம்,

## முன்னிலை : திரு.C.செந்தில்குமார், பி.காம்., பி.எல்.,

## சார்பு நீதிபதி, அவிநாசி

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13– ம் நாள் வியாழக்கிழமை

**M.C.O.P. No.75/2019**

**in**

**(CNR.No.TNTI16-000-437-2019)**

**ஈஸ்வரன்** ... மனுதாரர்

//எதிர்//

1. சிவசங்கரன் (எ) சரவணகுமார்
2. முத்துசாமி .. எதிர்மனுதாரர்கள்

| | | |
|---|---|---|
| (a) | இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி | ஈஸ்வரன், வயது 52, த/பெ.முத்துகுமாரசாமி, வசிப்பிடம் கதவு எண்.10/477–C, காமராஜர் வீதி, அவினாசி டவுன், அவினாசி தாலூக்கா. |
| (b) | எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் முகவரி | 1.சிவசங்கரன் (எ) சரவணக்குமார், வசிப்பிடம் கதவு எண்.11–A, சமையன் வீதி, தரங்கம்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம்.<br>2. முத்துசாமி, த/பெ.ராமசாமி, வசிப்பிடம் கதவு எண்.3/63, குளத்துப்பாளையம், பழுங்கரை கிராமம், அவினாசி தாலூக்கா. |
| (c) | பெயர் மற்றும் காப்பீடு நிறுவனத்தின் முகவரி | 1. சிவசங்கரன் (எ) சரவணக்குமார், வசிப்பிடம் கதவு எண்.11–A, சமையன் வீதி, தரங்கம்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம்.<br>2. முத்துசாமி, த/பெ.ராமசாமி, வசிப்பிடம் கதவு எண்.3/63, குளத்துப்பாளையம், |

| | | |
|---|---|---|
| | | பழங்கரை கிராமம், அவினாசி தாலூக்கா. |
| (d) | மாநகர போக்குவரத்து கழகம் (அ) இதர இழப்பீடு தொகை செலுத்ததக்க எதிர்மனுதாரர்கள் பெயர் மற்றும் முகவரி | 1. சிவசங்கரன் (எ) சரவணக்குமார், வசிப்பிடம் கதவு எண்.11–A, சமையன் வீதி, தரங்கம்பாடி, நாகப்பட்டினம் மாவட்டம்.<br>2. முத்துசாமி, த/பெ.ராமசாமி, வசிப்பிடம் கதவு எண்.3/63, குளத்துப்பாளையம், பழங்கரை கிராமம், அவினாசி தாலூக்கா. |
| (e) | இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி | 29.07.2019 |
| (d) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி | **13.08.2026** |
| (e) | பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை விபரம் | **ரூ.4,75,827/–** |
| (f) | வட்டி விகிதம் | 7.5% |
| (g) | எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும் | 29.07.2019 |
| (h) | செலவுத்தொகை விபரம் | நீதிமன்ற கட்டணம் ரூ 4,130.00<br>முத்திரை கட்டணம் ரூ. 20.00<br>வக்காலத்து ரூ. 10.00<br>வழக்கறிஞர் கட்டணம ரூ. 11,758.00<br>––––––––––<br>மொத்தம் ரூ. 15,918.00<br>–––––––––– |
| (i) | உத்தரவின்படி இழப்பீட்டுத் | இழப்பீட்டுத் தொகை முழுவதையும் |

| | | |
|---|---|---|
| | தொகை வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | Indian Bank A/c.No.6069476158 IFSC No. IDIB000A157 Avinashi Branch, Tiruppur–ல் உள்ள மனுதாரரின் வங்கி கணக்கில் 1,2 எதிர்மனுதாரர்கள் NEFT அல்லது RTGS மூலம் நேரடியாக வைப்பீடு செய்ய வேண்டும் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |
| (j) | மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையாளருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம் | பொருந்தத்தக்கதல்ல |
| (k) | இழப்பீட்டுத் தொகை எதன் மூலமாக எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | இழப்பீட்டுத் தொகை முழுவதையும் Indian Bank A/c.No.6069476158 IFSC No. IDIB000A157 Avinashi Branch, Tiruppur ல் உள்ள மனுதாரரின் வங்கி கணக்கில் 2–ம் எதிர்மனுதாரர் NEFT அல்லது RTGS மூலம் நேரடியாக வைப்பீடு செய்ய வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |
| (l) | இழப்பீட்டுத் தொகை கோருரிமையர் எவ்வாறு பெற்றுக் கொள்ளுவது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம் | இழப்பீட்டுத் தொகை முழுவதையும் Indian Bank A/c.No.6069476158 IFSC No. IDIB000A157 Avinashi Branch, Tiruppur–ல் உள்ள மனுதாரரின் வங்கி கணக்கில் 1,2 எதிர்மனுதாரர்கள் NEFT அல்லது RTGS மூலம் நேரடியாக வைப்பீடு செய்ய வேண்டும் என்றும், அது குறித்த |

| | | |
|---|---|---|
| | | விவரங்களை இந்த தீர்ப்பாயத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது. |
| (m) | எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருமையருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின் | இல்லை |
| (n) | உத்தரவு பிறப்பிக்கட்டட தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம் | **ரூ.4,75,827/-** |
| (o) | திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம் | இல்லை |

இம்மனுவானது 16.07.2026-ம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.A.ஆறுமுகம்** அவர்கள் ஆஜராகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் எதிர்வழக்குரை தாக்கல் செய்து, பின்னிட்டு வாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக இருந்தபோது பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரின்மையால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இத்தீர்ப்பாயம் வழங்கும்

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரருக்கு கடந்த 31.08.2018–ம் தேதியில் ஏற்பட்ட மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடாக ரூ.20,00,000/– வழங்கக் கோரி மோட்டார் வாகனச்சட்டம் 1988, பிரிவு 166–ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனு.

2. **மனுவின் சுருக்கம்**:–

மனுதாரர் ஈஸ்வரன் கடந்த 31.08.2018–ம் தேதியன்று காலை சுமார் 10.00 மணியளவில் மனுதாரரும், அவரது மனைவியும் மனுதாரருக்கு சொந்தமான TN 39 AK 7151 என்ற பதிவு எண்ணுள்ள மோட்டார் சைக்கிளை ஓட்ட அவரது மனைவியை பின்புறம் அமர வைத்துக்கொண்டு யூனியன் ஆபீஸ் குடியிருப்பு அருகில் காமராஜ் வீதியில் ரோட்டின் இடது புற ஓரத்தில் கிழக்கிலிருந்து மேற்காக சென்று கொண்டிருந்தபோது, அப்போது ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 29 AF 0966 என்ற பதிவு எண்ணுள்ள JCB வண்டியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரர் ஓட்டி வந்த மோட்டார் சைக்கிளின் மீது பலமாக மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். மேற்படி JCB வண்டி பலமாக மோதியதில் கீழே விழுந்து விட்டார்கள், அதில் மனுதாரருக்கு இடது மற்றும் வலது கால் முட்டிகளில் பலத்த ரத்த காயங்களும், அவரது மனைவிக்கு இடது கால், வலது கால், இடது கை, தலை ஆகிய இடங்களில் இரத்த காயங்கள் ஏற்பட்டு, உடனே தெரிந்த நபர் கோபால கிருஷ்ணன், அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலென்ஸ் மூலம் மனுதாரரையும், அவரது கணவரையும் அவிநாசி அரசு மருத்துவமனையில் முதலுதவி

சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டது. பின்னர் காயத்தின் தன்மையை பொறுத்து மேல் சிகிச்சைக்காக வேண்டி கோவை KMCH மருத்துமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும், பின்னர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 31.08.2018–ம் தேதியிலிருந்து சிகிச்சை எடுக்கப்பட்டு 02.09.2018–ம் தேதியில் கோயம்புத்துார், KMCH மருத்துவமனையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் அவிநாசி தலைமை காவலர் நிலைய பொறுப்பில் இருக்கும்போது கோவை KMCH மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ஈஸ்வரன் என்பவரை விசாரித்து போலீசார் புகார் வாக்குமூலத்தை பெற்று அவினாசி காவல்நிலைய குற்ற எண்.631/2018 இதச பிரிவுகள் 279, 337–ன் பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு காரணம் TN 29 AF 0966 என்ற பதிவு எண்ணுள்ள JCB வண்டி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதையும் தான் காரணம் ஆகும். மேற்படி விபத்தில் மனுதாரருக்கு இடது கால், வலது கால், இடது கை, வலது கை ஆகிய இடங்களில் இரத்தகாயங்கள் ஏற்பட்டு, அவர் கோவை KMCH மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, அவருக்கு மரபு வழி சிகிச்சை அளிக்கப்பட்டு, 02.09.2018–ம் தேதியில் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். மனுதாரர் விபத்து சமயத்தில் நல்ல உடல்நலத்துடனும், ஆரோக்கியத்துடனும் இருந்து பனியன் நிறுவனம் நடத்தி அதன் தனி உரிமையாளராக இருந்து மாதம் ரூ.50,000/–க்கு மேல் சம்பாதித்து வந்துள்ளார். இந்நிலையில், மனுதாரருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டதால் பனியன் நிறுவனத்தை நடத்த இயலாமல் போய்விட்டது. மனுதாரருக்கு கைகளையும், கால்களையும் மடக்க முடியவில்லை, வலது

மற்றும் இடது கால் முட்டிகளில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டதால் முழங்கால் கீழ் தொடர்ந்து வழி ஏற்பட்டு கொண்டிருந்ததால் தொடர்ந்து கோயம்புத்தூர் KMCH மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். 1–ம் எதிர்மனுதாரர் JCB வண்டி வாகனத்தின் ஓட்டுநர், 2–ம் எதிர்மனுதாரர் உரிமையாளர் ஆவார். எனவே, எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ, தனித்தனியாகவோ ரூ.20,00,000/–ஐ நஷ்ட ஈடாக மனுதாக்கல் செய்த தேதியிலிருந்து 12% சதவிகித வட்டி சேர்த்து மனுதாரருக்கு செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்து இழப்பீடு கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1,2 <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் பின்வருமாறு</u>:–

இம்மனுவில் கூறப்பட்டுள்ள ஒப்புக் கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர, பிறவற்றை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனு சட்டத்தின் படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனு சங்கதிகளை இம்மனுதாரரே உரிய ஆவணங்களின் மூலம் நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். மனுவின் 23 வது பத்தியில் விபத்து குறித்து கூறிய அனைத்து சங்கதிகளையும் இந்த எதிர்மனுதாரர் மறுக்கிறார். கடந்த 31.08.2018–ம் தேதியன்று நடைபெற்ற சாலை விபத்தில் TN 39 AK 7151 என்ற பதிவு எண்ணுள்ள மோட்டார் சைக்களுக்கு முறையான செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் இல்லை, ஆர்.சி புத்தகம் மற்றும் காப்பீடு இருக்கவில்லை. விபத்து சமயத்தில் மனுதாரரும், அவரது மனைவியும் தலைகவசம் அணியவில்லை. 1–ம் எதிர்மனுதாரர் சாலை விதிமுறைகளை கடைபிடித்து வாகனத்தை ஓட்டி வந்ததாகவும், மனுதாரரின் கவனக்குறைவால் தான் சாலை விபத்து நடந்து உள்ளதாகவும், விபத்து

நடந்த போது மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் வாகனத்தை ஓட்டுவதற்கு முறையான செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் வைத்திருக்கவில்லை. மனுதாரரின் வயது, தொழில், வருமானம் ஆகியவை மறுக்கப்படுகின்றன. எனவே 1,2 எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. மனுதாரர் விபத்து குறித்து நிரூபிக்க வேண்டும். மேற்படி விபத்தில் மனுதாரருக்கு காயங்கள் ஏற்பட்டதாக சொல்வதும் அதற்கு மருத்துவ செலவழித்ததாக சொல்லப்படும் சங்கதிகளும் மறுக்கப்படுகின்றன. அதிக இழப்பீடு பெற வேண்டி பல்வேறு தலைப்புகளின் கீழ் அதீதமான இழப்பீட்டை கோருகிறார். எனவே இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனைகள் என்னவெனில்</u>:–**

1. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN 29 AF 0966 என்ற பதிவு எண் கொண்ட JCB வண்டியின் ஓட்டுநரரான 1ம் எதிர்மனுதாரரின் அதிவேகம் மற்றும் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணமா?

2. மனுதாரருக்கு இழப்பீடு தொகை கிடைக்கத்தக்கதா? அவ்வாறெனில் அதன் அளவு என்ன?

3. மனுதாரருக்கு இழப்பீடு கிடைக்கும் பட்சத்தில் அதனை யார் செலுத்த வேண்டும் ?

**5.** மனுதாரர் தரப்பில், மனுதாரர் ஈஸ்வரன் என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, **ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12** வரையிலான ஆவணங்கள் பரிசீலனைக்காக குறியீடு செய்யப்பட்டது. ம.சா.1–ஐ தொடர்ந்து கோபாலகிருஷ்ணன் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி யாரும் விசாரிக்கப்படவில்லை சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. நீதிமன்ற சான்றாவணம் **நீ.ம.சா.ஆ.1** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>**பிரச்சனை எண்1:-**</u>

**6.1** இந்த மனுவானது மனுதாரர் ஈஸ்வரன் கடந்த 31.08.2018-ம் தேதியன்று காலை சுமார் 10.00 மணியளவில் மனுதாரருக்கு சொந்தமான TN 39 AK 7151 என்ற பதிவு எண்ணுள்ள மோட்டார் சைக்கிளை ஓட்ட அவரது மனைவியை பின்புறம் அமர வைத்துக்கொண்டு யூனியன் ஆபீஸ் குடியிருப்பு அருகில் காமராஜ் வீதியில் ரோட்டின் இடது புற ஓரத்தில் கிழக்கிலிருந்து மேற்காக சென்று கொண்டிருந்தபோது, அப்போது ரோட்டில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 29 AF 0966 என்ற பதிவு எண்ணுள்ள JCB வண்டியை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து மனுதாரரின் மோட்டார் சைக்கிளின் மீது பலமாக மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். மேற்படி JCB வண்டி பலமாக மோதியதில் கீழே விழுந்து விட்டார்கள், அதில் மனுதாரருக்கு இடது மற்றும் வலது கால் முட்டிகளில் பலத்த ரத்த காயங்களும், அவரது மனைவிக்கு இடது கால், வலது கால், இடது கை, தலை ஆகிய இடங்களில் இரத்த காயங்கள் ஏற்பட்டு, உடனே தெரிந்த நபர் கோபால கிருஷ்ணன், அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலென்ஸ் மூலம் மனுதாரரையும், அவரது மனைவியையும் அவிநாசி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டது. பின்னர் காயத்தின் தன்மையை பொறுத்து மேல் சிகிச்சைக்காக வேண்டி கோவை KMCH மருத்துமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை

எடுத்துக்கொண்டதாகவும், பின்னர் மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு 31.08.2018–ம் தேதியிலிருந்து சிகிச்சை எடுக்கப்பட்டு 02.09.2018–ம் தேதியில் கோயம்புத்தூர், KMCH மருத்துவமனையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் அவிநாசி தலைமை காவலர் அய்யாதுரை நிலைய பொறுப்பில் இருக்கும்போது கோவை KMCH மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசனை பெற்று மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ஈஸ்வரன் என்பவரை விசாரித்து போலீசார் புகார் வாக்குமூலத்தை பெற்று அவினாசி காவல்நிலைய குற்ற எண்.631/2018 இதச பிரிவுகள் 279, 337–ன் பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்திற்கு காரணம் TN 29 AF 0966 என்ற பதிவு எண்ணுள்ள JCB வண்டி வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் அதிவேகம், அஜாக்கிரதையும் தான் காரணம் ஆகும். மேற்படி விபத்தில் மனுதாரருக்கு இடது மற்றும் வலது கால் முட்டிகளில் பலத்த இரத்தகாயங்கள் ஏற்பட்டு, அவர் கோவை KMCH மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, அவருக்கு மரபு வழி சிகிச்சை அளிக்கப்பட்டு, 02.09.2018–ம் தேதியில் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். மனுதாரர் விபத்து சமயத்தில் நல்ல உடல் நலத்துடனும், ஆரோக்கியத்துடனும் இருந்து பனியன் நிறுவனத்தை நடத்தி அதன் தனி உரிமையாளராக இருந்து மாதம் ரூ.50,000/–க்கு மேல் சம்பாதித்து வந்துள்ளார். இந்நிலையில், மனுதாரருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டதால் மனுதாரருக்கு கைகளையும், கால்களையும் மடக்க முடியவில்லை, இடது மற்றும் வலது கால் முட்டிகளில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டதால் முழங்கால் கீழ் தொடர்ந்து வழி ஏற்பட்டு கொண்டிருந்ததால் தொடர்ந்து கோயம்புத்தூர் KMCH மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார்.

1–ம் எதிர்மனுதாரர் மேற்படி JCB வண்டி வாகனத்தின் ஓட்டுநர், 2–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர். எனவே, எதிர்மனுதாரர்கள் கூட்டாகவோ, தனித்தனியாகவோ ரூ.20,00,000/–ஐ நஷ்ட ஈடாக மனுதாக்கல் செய்த தேதியிலிருந்து 12% சதவிகித வட்டி சேர்த்து மனுதாரருக்கு செலுத்த கடமைப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்து சாட்சியம் அளித்துள்ளார். அதனைத்தொடர்ந்து விபத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்ட ம.சா.2 கோபால கிருஷ்ணன் தனது சாட்சியத்தில், தனக்கு மனுதாரரை நன்கு தெரியும் என்றும், கடந்த 31.08.2018–ம் தேதியன்று நடைபெற்ற சாலை விபத்தில் ஈஸ்வரன் மற்றும் அவரது மனைவி ராஜாமணி JCB வண்டி மோதியதால் கீழே விழுந்து விட்டனர் என்றும், கீழே விழுந்ததில் ஈஸ்வரனுக்கு இடது மற்றும் வலது கால் முட்டிகளில் பலத்த இரத்தக்காயங்களும், ராஜாமணிக்கு இடது கால், வலது கால், இடது கை, தலை ஆகிய இடங்களில் பலத்த இரத்தக்காயங்களும் ஏற்பட்டது. உடனே அருகில் இருந்தவர்கள் முதலுதவி சிகிச்சைக்காக அவினாசி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும், பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை KMCH மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டதை தெரிந்து கொண்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**6.2.** இந்நிலையில், மனுதாரரின் இந்த மனுவை ஆட்சேபித்து எதிர்வழக்காடும் வகையில் இந்த மனுவில் எதிர்மனுதாரர்களுக்கு இந்நீதிமன்றம் அனுப்பிய அழைப்பாணையை எதிர்மனுதாரர்கள் பெற்றுக்கொண்டும் எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாத நிலையில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக 22.01.2026–ம்

தேதியில் எதிர்மனுதாரர்களை தோன்றாதரப்பினராக வைத்து ஒருதலைபட்ச உத்தரவிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

**6.3.** இந்நிலையில், இந்த மனுவை கவனமாக பரிசீலிக்கையில், இந்த வழக்கில் விபத்து சம்பந்தமாக கோவை KMCH மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அவினாசி தலைமை காவலர் அய்யாதுரை என்பவர் மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த ஈஸ்வரன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் அவினாசி காவல்துறையினரால் குற்ற எண்.631/2018 பிரிவுகள் 279, 337–இதச படி TN 29 AF 0966 என்ற வாகனத்தின் ஓட்டுநர் மீது முதல் தகவல் அறிக்கை **ம.சா.ஆ.1** பதிவு செய்யப்பட்டுள்ளது. **ம.சா.ஆ.2** இறுதி அறிக்கையில் TN 29 AF 0966 என்ற பதிவெண் கொண்ட JCB வாகன ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரர் தான் குற்றவாளியாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் விபத்து நடந்த இடத்தை காட்டும் வகையில் மனுதாரர் தரப்பில் பார்வை மகஜர் **ம.சா.ஆ.3** ஆகவும் தாக்கல் செய்துள்ளார்கள். இந்த நிலையில், இந்த வழக்கு விபத்தில் 1–ம் எதிர்மனுதாரர் ஓட்டி சென்ற TN 29 AF 0966 என்ற JCB வாகனம் சம்மந்தப்பட்டு வழக்கு விபத்து ஏற்படுத்தி உள்ளது என்பது ஊர்ஜிதமாகிறது. மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலிக்கையில் TN 39 AK 7159 என்ற வாகனத்திற்கு வலது பக்க உதைப்பான் முனை உடைந்தும், கால் வைக்கும் இடம் வளைந்து சேதாரங்கள் ஏற்பட்டுள்ளது என்றும், TN 29 AF 0966 சேதாரம் எதுவும் ஏற்படவில்லை என்றும், **ம.சா.ஆ.4**, **ம.சா.ஆ.5** மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலித்த வகையில் தெரிய வருகிறது. இந்நிலையில், இந்த வழக்கு விபத்திற்கு விபத்து சமயம் விபத்தில் சம்மந்தப்பட்ட 1–ம் எதிர்மனுதாரர் TN 29 AF 0966 என்ற JCB

வாகனத்தை ஓட்டி வந்துள்ளார் என்பதும், குற்ற வழக்கு ஆவணத்தின் படி இவ்வழக்கு விபத்தானது JCB வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையும், அதிவேகமும், கவனக்குறைவும் தான் காரணம் என்பது ஊர்ஜிதமாகிறது.

**6.4.** இந்நிலையில், இவ்வழக்கு விபத்தானது TN 29 AF 0966 என்ற JCB வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் விபத்திற்கு காரணம் என்பதை மனுதாரர் தனது வாய்மொழி சாட்சியத்தின் மூலமும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் நிரூபணம் செய்துள்ளார். மனுதாரரின் வழக்கிற்கு ஆதரவான வகையில் முதல் தகவல் அறிக்கை, மருத்துவ பில்கள், மோட்டார் வாகன ஆய்வறிக்கை, ஊனச்சான்றிதழ் உள்ளது. இந்நிலையில், மாண்புமிகு உச்சநீதிமன்றம் பிறப்பித்த முன் தீர்ப்பான **2014 (4) SCC 511 Meera Devi and another Vs. H.R.T.C and others** என்ற முன் தீர்ப்பில், 1–ம் எதிர்மனுதார் மனுதாரர் மீது கவனக்குறைவு என்ற சங்கதியை முன் வைத்தால் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் எதிர்மனுதாரரே அதனை நிரூபிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. அதேபோல், நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் **2014 (1) TNMAC 156 Muthu Vs, Managing Director, TNSTC** என்ற முன் தீர்ப்பில் விபத்து இழப்பீடு கோரும் வழக்கில் கவனக்குறைவு என்ற சங்கதியானது, சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட தேவையில்லை என்றும், அதனை பெரும்பான்மை சங்கதிகளின் அடிப்படையிலேயே நிரூபிக்கலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அடிப்படையில் TN 29 AF 0966 என்ற JCB வண்டியை ஓட்டி வந்த ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரர் தான் அதிவேகமாகவும்,

அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து யூனியன் ஆபீஸ் குடியிருப்பு அருகில் காமராஜ் வீதியில் ரோட்டின் இடது புற ஓரத்தில் கிழக்கிலிருந்து மேற்காக சென்று கொண்டிருந்த போது மனுதாரரும், மனுதாரரின் கணவரும் சென்று கொண்டிருந்த வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி உள்ளார் என்று பிரச்சனை எண்.1–க்கு முடிவு காணப்படுகிறது.

**7. <u>பிரச்சனை எண்2</u>:–**

**7.1.** மனுதாரருக்கு கடந்த 31.08.2018–ம் தேதியன்று வாகன விபத்து ஏற்பட்டு அந்த விபத்தில் அவருக்கு அவரது இடது மற்றும் வலது கால் முட்டிகளில் பலத்த இரத்தகாயங்கள் ஏற்பட்டு, அதற்காக மனுதாரர் சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. அதனை நிரூபிக்கும் விதத்தில் காயச்சான்றிதழ் ம.சா.ஆ.6 , ம.சா.ஆ.7 டிஸ்சார்ஜ் சம்மரி, ம.சா.ஆ.8, ம.சா..ஆ.9, ம.சா.ஆ.10, ம.சா.ஆ.11 மருத்துவ பில்கள், நீ.ம.சா.ஆ.1 ஊனச்சான்றிதழ், வரையிலான சிகிச்சை எடுத்துக்கொண்டது சம்பந்தமான மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், இவ்வழக்கு விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரரின் TN 29 AF 0966 என்ற JCB வாகன ஒட்டுநரே காரணம் எனவும், பிரச்சனை எண்.1ல் முடிவு காணப்பட்டுள்ள நிலையில், மேற்படி விபத்திற்கு 1–ம் எதிர்மனுதாரான ஓட்டுநரே காரணம் என்பதும், அந்த வாகனத்தின் உரிமையாளர் 2–ம் எதிர்மனுதாரர் என்பதும், அந்த வாகனத்திற்கு காப்பீடு எதுவும் செய்யவில்லை என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், 1–ம் எதிர்மனுதாரரின் JCB வாகன ஓட்டுநர் தான் இந்த வழக்கு விபத்துக்கு காரணம் என்று முடிவு காணப்பட்டுள்ள நிலையில், **ம.சா.ஆ.4, ம.சா.ஆ.5** மோட்டார் வாகன

ஆய்வறிக்கையிலிருந்து 1–ம் எதிர்மனுதாரரே தீங்கிழைத்த வாகனத்தின் ஓட்டுநர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரர் அந்த JCB வாகனத்தின் உரிமையாளர் என்பது தெரிய வருகிறது. அதனால், மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கொடுக்கக் 1,2 எதிர்மனுதாரர்கள் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். ஆனால், அந்த JCB வாகனத்தின் ஓட்டுநர் என்ற முறையிலல் 1–ம் எதிர்மனுதாரரும், உரிமையாளர் என்ற முறையில் 2–ம் எதிர்மனுதாரரும் சேர்ந்து மனுதாரருக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். எனவே, மனுதாரருக்கு வாகன விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடு வழங்க 1,2 எதிர்மனுதாரர்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்பாளர்கள் ஆவார்கள் என்று பிரச்சனை எண்.2–க்கு தீர்வு காணப்படுகிறது.

**8. <u>பிரச்சினை எண்</u>3:–**

**8.1** இந்த வழக்கு விபத்தில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு திருப்பூர் மருத்துவ குழுமத்தினரால் உடல் இயலாமைக்காக **10%** சதவீதமும், செயல்பாட்டு இயலாமைக்காக **30%** சதவீதமும் குறிப்பிட்டு ஊனச்சான்று கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஊனச் சான்று **நீ.ம.சா.ஆ.1** ஆக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு நிரந்தர ஊனம் மற்றும் செயல் இழப்பிற்கு அவருக்கு 30% சதவீதத்திற்கு கணக்கிட்டு இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென்று வாதிட்டார். இந்த நிலையில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள **ம.சா.ஆ.7** மருத்துவ வெளியேற்ற குறிப்பிலிருந்து மனுதாரருக்கு இடது மற்றும் வலது கால் முட்டிகளில் ஏற்பட்ட இரத்த காயங்களுக்காக 31.08.2018–ம் தேதி முதல் 02.09.2018–ம் தேதி வரையில் கோவை KMCH மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்துக் கொண்டுள்ளார்

என்பது தெரிய வருகிறது. மேற்கண்ட ம.சா.ஆ.7 ஆவணத்தில் மனுதாரருக்கு,

**FINAL DIAGNOSIS:**

**Left Superior Pole of Patella Fracture**

**Diabetes Mellitus**

**Hypertension**

என்ற காயங்கள் ஏற்பட்டு இருந்ததாகவும், அந்த காயங்களுக்கு மரபு முறையில் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது என்தும் தெரிய வருகிறது.

**8.2.** இந்நிலையில், மனுதாரருக்கு இடது மற்றும் வலது கால் முட்டிகளில் ஏற்பட்ட காயத்திற்கு உடல் இயலாமைக்காக **10%** சதவீதமும், செயல்பாட்டு இயலாமைக்காக **30%** சதவீதமும் குறிப்பிட்டு ஊனச்சான்று திருப்பூர் மருத்துவ குழுமத்தினரால் ஊனச்சான்று **நீ.ம.சா.ஆ.1** கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஊனச்சான்று வழங்கிய மருத்துவர்களை சாட்சியாக அழைத்து இவ்வழக்கில் விசரிக்கப்படவில்லை. இந்நிலையில், மனுதாரருக்கு இடது கால், இடது கை, தலையில் ஏற்பட்ட கொடுங்காயத்தின் தன்மையை பொறுத்து நீ.ம.சா.ஆ.1–ல் உடல் இயலாமைக்காக **10%** சதவீதமும், செயல்பாட்டு இயலாமைக்காக **30%** சதவீதமும் குறிப்பிட்டு ஊனச்சான்று கொடுக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரால் எந்தவொரு வேலையும் செய்ய முடியாத நிலையில் இருந்து வருவதாகவும், அதனால், மனுதாரருக்கு ஏற்பட்ட நிரந்தர ஊனத்தின் தன்மையை கருத்தில் கொள்ளும் போது மனுதாரர் அவருக்கு ஏற்பட்டுள்ள நிரந்தர ஊனத்தால் எந்த வித வேலையும் செய்ய முடியாது என்றும், அதனால், இந்த மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள ஊனமாக அதிகபட்சமாக **30%**

சதவீதத்தையே இந்த தீர்ப்பாயம் கணக்கிற்கு எடுத்து கொண்டு, அதன் அடிப்படையில் **1%** நிரந்தர ஊனத்திற்கு **ரூ.8,000/–** என நிர்ணயித்து மனுதாரரின் நிரந்தர ஊனத்திற்கு இழப்பீடு **30 x 8,000 = 2,40,000/–** என நிர்ணயிக்கப்படுகிறது. மேலும், மனுதாரர் பனியன் நிறுவனம் நடத்தி அதன் தனி உரிமையாளராக இருந்து மாதம் ரூ.50,000/– வருமானம் பெற்று வந்தது என்பதை காண்பிக்கும் வகையில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களையும் முன்நிறுத்தவில்லை. எனவே, மனுதாரரின் மருத்துவ வெளியேற்ற குறிப்பில் விபத்து நடந்த தேதியில் மனுதாருக்கு வயது 60 ஆகும். அதனால், மனுதாரரின் தோராய வருமானமாக மாதம் **ரூ10,000/–** நிர்ணயிக்கப்படுகிறது. இந்நிலையில், மனுதாரர் 31.08.2018–ம் தேதியில் இருந்து 02.09.2018–ம் தேதி வரை மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றிருக்கிறார். அவருடைய தோராய மாத வருமானம் ரூ.10,000/– ஆக நிர்ணயிக்கப்பட்ட நிலையில், அவர் விபத்தில் ஏற்பட்ட காயங்களால் 3 மாதங்கள் வேலைக்கு செல்ல முடியாமல் இருந்திருக்கலாம் என முடிவு செய்து அவரின் வருமான இழப்பாக 3 x 10,000 = **ரூ.30,000**/– நிர்ணயிக்கப்படுகிறது.

**8.3.** மனுதாரர் தனது மருத்துவ செலவு **ரூ.98,827/–க்கும்** மேல் செலவு ஏற்பட்டதாக தெரிவித்து அதற்கு ஆதரவாக **காயச்சான்றிதழ் ம.சா.ஆ.6, மருத்துவ பில் ரசீதுகள் ம.சா.ஆ.8, ம.சா.ஆ.9, ம.சா.ஆ.10, ம.சா.ஆ.11** ஆக தாக்கல் செய்துள்ளார். அந்த மருத்துவ பில்களில் கண்ட தொகை **ரூ.98,827 –** மனுதாருக்கு சட்டப்படி கிடைக்கத்தக்கது ஆகும். அதேபோல், மனுதாரர் போக்குவரத்து செலவிற்காக தோராயமாக **ரூ.10,000/–** என்று கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஊட்டசத்து மற்றும் உடனிருந்தோர் செலவுத்தொகை **ரூ.10,000/–** என்று கணக்கில்

எடுத்துக்கொள்ளப்படுகிறது. மேலும், மனுதாரருக்கு விபத்தில் கொடுங்காயங்கள் ஏற்பட்டு அவருக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், மனுதாரருக்கு இடது மற்றும் வலது கால் முட்டிகளில் ஏற்பட்ட கொடுங்காயத்திற்கு மனுதாரரின் வலி மற்றும் வேதனைக்காக **ரூ.75,000/-** மும், அவருக்கு வசதி வாய்ப்பு குறைவிற்காக **ரூ.10,000/-** தர தக்கது என தீர்மானிக்கப்படுகிறது. மேலும், அவரது ஊட்டச்சத்து மற்றும் ஆபரண சேதத்திற்காக **ரூ.2,000**/-மும் தர தக்கது என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்யப்படுகிறது.

| **வ.எண்** | **இழப்பீட்டு தலைப்புகள்** | **தொகை விபரம்** |
|---|---|---|
| 1 | நிரந்தர ஊனம் மற்றும் நிரந்தர வருவாய் இழப்பிற்காக (30% x ரூ.8,000/-) | ரூ. 2,40,000/- |
| 2 | மருத்துவ செலவு | ரூ. 98,827/- |
| 3 | போக்குவரத்து செலவு | ரூ. 10,000/- |
| 4 | ஊட்டசத்து மற்றும் உடனிருந்தோர் செலவுத்தொகை | ரூ. 10,000/- |
| 5 | வலி மற்றும் வேதனை | ரூ. 75,000/- |
| 6 | வசதி இழப்பு | ரூ. 10,000/- |
| 7 | ஆடை ஆபரண சேதத்திற்கு | ரூ. 2,000/- |
| 8 | வருமான இழப்பிற்கு **(3 x 10,000 = 30,000)** | ரூ. 30,000/- |
| | மொத்தம் | **ரூ.4,75,827/-** |

இந்த மனுவில் மனுதாரருக்கு விபத்தில் ஏற்பட்ட கொடுங்காயங்களுக்கு மொத்த இழப்பீடாக **ரூ.4,75,827/–**ஐ வழங்குவது என்று இந்த தீர்ப்பாயம் முடிவு காண்கிறது.

**முடிவாக, இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.4,75,827–ஐ 1,2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ செலுத்த வேண்டும் என்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகையை வைப்பீடு செய்யும் நாள் வரையில் ஆண்டுக்கு 7.5% வட்டியுடன் வழக்கு செலவுத் தொகையையும் சேர்த்து 2 மாத காலத்திற்குள் மனுதாரரின் வங்கி கணக்கு வைத்துள்ள The Indian Bank A/c.No.6069476158 IFSC No. IDIB000A157 Avinashi Branch, Tiruppur–ல் உள்ள மனுதாரரின் வங்கி கணக்கில் 1,2–ம் எதிர்மனுதாரர்கள் NEFT அல்லது RTGS மூலம் நேரடியாக வைப்பீடு செய்ய வேண்டும் என்றும், அது குறித்த விவரங்களை இந்த தீர்ப்பாயத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும், மனுதாரர் செலுத்த வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம் ரூ.4,130/–ஐ 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்றும், மனுதாரரின் வழக்குரைஞர் கட்டணம் ரூ.11,758/–ஐ 1,2 எதிர்மனுதாரர்கள் செலுத்த வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தாளரிடம், நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஆகஸ்ட் 13–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.08.13 17:54:08 +0530

**சார்பு நீதிபதி,**
**அவிநாசி.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:–**

ம.சா.1 – ஈஸ்வரன்

ம.சா.2 – கோபாலகிருஷ்ணன்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

| | | | |
|---|---|---|---|
| **ம.சா.ஆ.1** | 02.09.2018 | முதல் தகவல் அறிக்கை | உண்மை நகல் |
| **ம.சா.ஆ.2** | 02.09.2018 | இறுதி அறிக்கை | உண்மை நகல் |
| **ம.சா.ஆ.3** | 02.09.2018 | பார்வை மகஜர் | உண்மை நகல் |
| **ம.சா.ஆ.4** | – | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 39 AK 7159 Motor Cycle with gear. | உண்மை நகல் |
| **ம.சா.ஆ.5** | – | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை TN 29 AF 0966 (JCB) | உண்மை நகல் |
| **ம.சா.ஆ.6** | 02.09.2018 | காயச்சான்றிதழ் | உண்மை நகல் |
| **ம.சா.ஆ.7** | 02.09.2018 | டிஸ்சார்ஜ் சம்மரி | அசல் |
| **ம.சா.ஆ.8** | – | மருத்துவ பில் | அசல் |
| **ம.சா.ஆ.9** | – | மருத்துவ பில் | அசல் |
| **ம.சா.ஆ.10** | – | மருத்துவ பில் | அசல் |
| **ம.சா.ஆ.11** | – | மருத்துவ பில் | அசல் |
| **ம.சா.ஆ.12** | 08.04.2026 | அவினாசி நீதித்துறை நடுவர் நீதிமன்ற STC.No.939/2023 உத்தரவு | நகல் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>:–** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>:–** இல்லை

**<u>நீதிமன்ற சான்றாவணம்:</u>–**

| | | |
|---|---|---|
| **நீ.ம.சா.ஆ.1** | ஊனச்சான்றிதழ் | அசல் |

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2026.08.13 17:54:18 +0530

**சார்பு நீதிபதி,**
**அவிநாசி.**

**சீரான/வரைவு உத்தரவு**
**மோ.வா.வி.கோ.தீ.ம.எண்.75/2019**
**நாள்.13.08.2026**